[24th April 1959

SRI T. S. RAMASWAMY PILLAI : When was action taken against the office-bearers of the society and when against Government officials who were in charge? What type of action was taken?

THE HON. SRI R. VENKATARAMAN : Action was taken on 1st February 1957 and proceedings are pending against the officers.

SRI K. VINAYAKAM : Was not the fraud spread over a range of period and officers belonging to the department abetting this kind of crime?

THE HON. SRI R. VENKATARAMAN : The matter is under enquiry and we cannot given any opinion before it is finished.

SRI R. KRISHNASAMI NAIDU : சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு ஸ்தாபனத்தில் இத்தகைய கோளாறுகள் அடிக்கடி நடந்து கொண்டிருப்ப தால் இதைபபற்றி விசாரணை செய்கின்ற அதிகாரிகள் தொடர்ந்து இருப் பதற்குப் பதிலாக அடிக்கடி அவர்களுக்கு இடமாற்றம் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே இதைப்பற்றியுள்ள விசாரணை முடிவதற்கு வருஷக் கணக்காக ஆகிவிடுகிறது. ஆகவே இம்மாதிரி ஸ்தாபனங்களில் நடைபெறும் கோளாறுகளைப்பற்றி விசாரணை செய்வதற்காக கூட்டுறவு ஸ்தாபனத்தின் கீழ் தனியாக ஏதாவது ஒரு டிபார்ட்மெண்டோ அல்லது தனி செக்ஷனோ ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒவ்வொரு இலாகாவில் நடை பெறும் குற்றங்களை எல்லாம் விசாரணை செய்வதற்காக அந்தந்த இலாகாவின் கீழ் தனித்தனி யூனிட்டோ அல்லது டிபார்ட்மெண்டோ ஏற்படுத்துவது என்றால் அது வீணகத்தான் இருக்கும், அதோடு பணமும் விரயமாகும். மேலும் இதைப்பற்றி விசாரணை செய்கின்ற அதிகாரிகளை அடிக்கடி மாற்று வது கிடையாது. மூன்று வருடத்திற்கு ஒருமுறை மாற்ற வேண்டும் என்கின்ற முறையில்தான மாற்றப்பட்டு வருகிறது. அதல்லாமல் வேறு எந்த காரணத்திற்காகவும் மாற்றப்படுவதில்லை.

Hill tribes

*136 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்ஜியத்தில் எவ்வளவு பேர்கள் நரிக்குறவர்கள், குரு விக்காரர்கள் மற்றும் மலை ஜாதியினர் (ஜில்லாவாரியாக) ?

(ஆ) இவர்களில் எவ்வளவு பேர்கள் படிக்கக்கூடியவர்கள் ?

(இ) இவர்களில் யாராவது படித்து உத்தியோகத்தில் இருக்கிறார் களா ? அப்படியானால் ஜில்லாவாரியாக விவரங்களைத் தெரிவிக்கவும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) *to* (*c*) Particulars are being collected from the Collectors and they will be placed on the table of the House after they are obtained.

Reclamation of saline and alkaline lands

*137 *Q.*—SRI G. G. GURUMURTHI (on behalf of SRI K. R. NALLASIVAM) : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் நஞ்சைப் பகுதிகளில் உள்ள களர் நிலங் களைச் சீர்திருத்த பொதுவான திட்டம் போடப்பட்டுள்ளதா ?